**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.O.S. No. 105/2015**

**Deposition of P.W. 5** – டாக்டர் திருமதி**.** விஜயா

**Dated: 22.01.2025**

Accused Present

**எதிரி தரப்பு கூடுதல் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் எலும்பு முறிவு மருத்துவர் அல்ல. காயம்பட்ட நபருக்கு நான் முழுமையான சிகிச்சை வழங்கவில்லை என்றால் சரியல்ல. உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டதால் அப்போது இருந்த மருத்துவர்கள் சிகிச்சை வழங்கி இருப்பார்கள். காயம்பட்ட நபருக்கு உச்சந்தலையில் காயம் இல்லை. அ.சா.3ல் காயத்தின் நிறம் பற்றி குறிப்பிடவில்லை. இருசக்கர வாகனத்திலிருந்து கீழே விழும் போது 1வது காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. காயம்பட்ட நபர் குப்புற விழும் போது 2வது காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. காயங்களின் திசைகள் குறிப்பிடப்படவில்லை. காயம்பட்ட நபர் சொன்ன நேரத்திற்கு ½ மணி நேரத்திற்கு முன்னதாக காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.